பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை
04 03 2026 WEDNESDAY 7.15 PM
ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. இந்தியாவின் வெளியுறவுக் கொள்கைகள் மியான்மரின் முன்னேற்றத்தை உறுதி செய்வதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

2. மேற்காசிய நாடுகள் மற்றும் வளைகுடா நாடுகளில் உள்ள இந்தியர்களுக்கு உதவ வெளியுறவு அமைச்சகம் புதுதில்லியில் கட்டுப்பாட்டு அறையை நிறுவியுள்ளது.

3. மேற்காசிய நாடுகளில் இஸ்ரேல் தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ளது.

4. வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க கிராமப்புற பெண்களுக்கான அதிகாரம் உறுதி செய்யப்பட வேண்டும் என்று மத்திய இணையமைச்சர் திரு சந்திரசேகர் பெம்மசானி தெரிவித்துள்ளார்.

5. உலகக்கோப்பை டுவென்டி – டுவென்டி கிரிக்கெட் போட்டியின் முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் நியூசிலாந்துக்கு எதிராக தென்னாப்பிரிக்கா முதலில் பேட் செய்து வருகிறது.

<u>இனி விரிவான செய்திகள் –</u>

<<<<<<<>>>>>

இந்தியாவில் மூன்று முக்கிய வெளியுறவுக் கொள்கைகள் மியான்மரின் முன்னேற்றத்திற்கு உதவிடுவதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

Sarso BeikMan இலக்கிய மையத் திறப்புவிழாவில் பேசிய அவர், அண்டை நாட்டுக்கு முன்னுரிமை, கிழக்கத்திய நாடுகள் கொள்கை மற்றும் மகாசாகர் ஆகியவற்றில் பலன்களை மியான்மர் பெற்று வருவதாக கூறினார்.

இந்த மையம் இருதரப்பு நல்லுறவின் அடையாளமாக திகழ்கிறது என்றும் குறிப்பிட்டார்.

Sarso BeikMan இலக்கிய மையம் மியான்மரின் தொன்மை சிறப்புமிக்க இலக்கிய படைப்புகள் மற்றும் நாட்டுப்புற இலக்கியங்களின் பாதுகாப்பு மையமாக திகழும் என்றும் தெரிவித்தார்.

புதிய தலைமுறையினருக்கு மியான்மரின் கலாச்சார பண்பாட்டை எடுத்துரைக்கும் அரங்கமாக இது அமையும் என்றும் கூறினார்.

மியான்மர்- இந்தியா இடையிலான இருதரப்பு உறவுகள் இருநாட்டு மக்கள் சார்ந்தது என்றும் அவர் தெரிவித்தார்.

Kaladan பன்முக போக்குவரத்து திட்டம் உள்ளிட்டவை இரு தரப்பு மற்றும் மண்டல அளவிலான வளர்ச்சியையும் உறுதி செய்வதாக அவர் தெரிவித்தார்.

இருநாடுகளுக்கிடையிலான நட்புறவு வர்த்தம் மற்றும் பொருளாதாரத்தை மேம்படுத்தும் என்றும் கூறினார்.

கோவிட் பெருந்தொற்று மற்றும் இயற்கை பேரிடர்களின் போது இந்தியா, மியான்மருக்கு உதவிக்கரம் நீட்டியதாகவும் அவர் குறிப்பிட்டார்.

வரும் நாட்களிலும் மியான்மரின் வளர்ச்சி மற்றும் அமைதிக்கு இந்தியா துணைபுரியும் என்றும் டாக்டர் ஜெய்சங்கர் கூறினார்.

<<<<<<>>>>>

மேற்கு ஆசியா மற்றும் வளைகுடா நாடுகளில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக பாதிக்கப்பட்டுள்ள இந்திய மக்களுக்கு உதவுவதற்காக வெளியுறவுத்துறை அமைச்சகம் கட்டுப்பாட்டு அறை ஒன்றை அமைத்துள்ளது.

இதனை தொடர்பு கொள்வதற்கான எண்களும் அறிவிக்கப்பட்டு உள்ளன.

18 00 11 87 97 என்ற கட்டணமில்லா எண்ணிலும், 011 23 01 79 05 மற்றும் 011 23 01 21 13 என்ற எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம்.

011 23 01 41 04 என்ற எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கு ஆசியா மற்றும் வளைகுடா நாடுகளில் சண்டை நடைபெறும் இடங்களில் உள்ள மக்கள் இந்திய தூதரகங்களை தொடர்பு கொள்ள 24 மணி நேரமும் செயல்படும் அவசர கால உதவி எண்களும் அறிவிக்கப்பட்டுள்ளன.

<<<<<<>>>>>

மேற்கு ஆசிய நாடுகளில் இஸ்ரேல் தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ளது.

ஈரானின் டெஹ்ரான் நகரில் உள்ள உள்நாட்டு பாதுகாப்பு கட்டளை மையங்கள் மற்றும் Basij பகுதியில் தாக்குதல்களை நடத்தியுள்ளது.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள இஸ்ரேல் ராணுவம், ஈரான் நாடு முழுவதையும் கண்காணிக்க இந்த மையங்களை அந்நாட்டு அரசு பயன்படுத்தி வருவதால் அந்த கட்டமைப்பை தாக்கி அழித்ததாக தெரிவித்துள்ளது.

ஏவுகணை உள்ளிட்ட ஈரான் நாட்டின் தாக்குதல்களை தாம் முறியடித்ததாகவும் இஸ்ரேல் ராணுவம் கூறியுள்ளது.

ஈரானின் பாதுகாப்பு கட்டமைப்புகளை இயக்கிய வீரர்கள் மீதும் இஸ்ரேலிய விமானப்படை தாக்குதல் நடத்தியதாக தெரிவித்துள்ளளது.

இதனிடையே ஈரான் நாட்டு தொலைக்காட்சியில் தாக்குதலில் உயிரிழந்த காமெனியின் இறுதி சடங்குகள் ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க செய்தி நிறுவனம் வெளியிட்டுள்ள தகவலில், கடந்த மாதம் 28ஆம் தேதி முதல் ஈரானில் நடத்திய

தாக்குதலில் ஆயிரத்து 97 அப்பாவி பொதுமக்கள் கொல்லப்பட்டதாக தெரிவித்துள்ளது.

ஈரான் நாட்டிற்கு புதிய தலைவர் நியமிக்கப்படும் பட்சத்தில் அவர் மீதும் தாக்குதல் நடத்தி அழிக்கும் பணியில் இஸ்ரேலிய படையினர் ஈடுபடுவார்கள் என்று அந்நாட்டு பாதுகாப்பு துறை அமைச்சர் Isrel Katz எச்சரித்துள்ளார்.

ஈரானில் தாக்குதல் நடத்தி வரும் அமெரிக்க ராணுவத்தின் கமாண்டர் அட்மிரல் Brad Cooper, ஈரானிய படைகள் கடும் தாக்குதலுக்கு உள்ளாவதாகவும் அவர்கள் ஒட்டுமொத்தமாக பின்வாங்கும் வரை தாக்குதல் தொடரும் என்றும் கூறியுள்ளார்.

<<<<<<>>>>

ஆந்திர பிரதேச மாநிலத்தின் தீனதயாள் அந்யோத்யா திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து மத்திய ஊரக வளர்ச்சித்துறை இணையமைச்சர் திரு. சந்திரசேகர் பெம்மசானி தெரிவித்துள்ளார்.

சமுக வலைதளத்தில் இதை தெரிவித்துள்ள அவர், தேசிய ஊரக வாழ்வாதர இயக்கம் குறித்தும் தாம் ஆய்வு செய்ததாக குறிப்பிட்டுள்ளார்.

ஆந்திர பிரதேசத்தில் சுய உதவிக்குழுக்களை வலுப்படுத்துவது குறித்து துறை அதிகாரிகளிடம் தாம் ஆலோசனை நடத்தியதாகவம் கூறியுள்ளார்.

கிராமப்புறங்களில் நீடித்த வாழ்வாதாரம் மற்றும் வருமானத்தை பெருக்குவதற்கான திட்டங்களை கொண்டு வருவது குறித்தும் ஆறு கோடி பெண்களை லட்சாதிபதியாக்கும் தேசிய இலக்கை எட்டுவது குறித்தும் தாம் விவாதித்ததாக தெரிவித்தார்.

வளர்ச்சி அடைந்த இந்தியாவுக்கான இலக்கை எட்டுவதற்கு கிராமப்புற பெண்களுக்கான அதிகாரம் உறுதி செய்யப்பட வேண்டும் என்றும் திரு. சந்திரசேகர் பெம்மசானி கூறியுள்ளார்.

<<<<<<>>>>

கேரள அரசு முன்வந்தால் அம்மாநிலத்தில் செயல்பட்ட வரும் மீன்வளக் கூட்டமைப்பை தேசிய கூட்டுறவு அமைப்பாக உயர்த்துவதற்கு மத்திய அரசு தயாராக உள்ளது என்று மீன்வளத்துறை இணையமைச்சர் திரு. ஜார்ஜ் குரியன் தெரிவித்துள்ளார்.

கேரள மாநிலம் விழிஞ்சத்தில் உள்ள மத்திய கடல் மீன் ஆராய்ச்சி நிறுவனத்தில் பிரதமரின் மேம்பாட்டு திட்டம் குறித்த பயிலரங்கை தொடங்கி வைத்து பேசிய அவர், கேரள அரசு மீன் வளக் கூட்டமைப்பை தேசிய கூட்டுறவு அமைப்பாக விரிவு படுத்துவதற்கான திட்ட அறிக்கையை அளிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

இந்த திட்டத்துக்கு தேவையான நிதி உதவியை மத்திய அரசு வழங்கும் என்றும் தெரிவித்தார்.

மத்திய- மாநில அரசுகள் இணைந்து செயல்பட்டால்தான் மீன்வளத்துறை நிலையான உறுதியான வளர்ச்சியை பெற முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

<<<<<<>>>>

மேற்காசிய நாடுகளில் நிலவிவரும் போர் சூழல் காரணமாக இன்றும் கச்சா எண்ணெய் விலை உயர்ந்துள்ளது.

Brent கச்சா எண்ணெய் விலை ஒன்றரை சதவீதம் உயர்ந்து, 82 அமெரிக்க டாலராக உள்ளது.

ஒரு பேரலுக்கு 65 சென்ட்டுகள் உயர்ந்துள்ளது.

WTI கச்சா எண்ணெய் புள்ளி எட்டு சதவீதம் உயர்ந்து, 75 அமெரிக்க டாலராக உள்ளது.

பேரலுக்கு 16 சென்ட் உயர்ந்துள்ளது.

<<<<<<>>>>

இந்திய புவியியல் ஆய்வு மையத்தின் 176-வது நிறுவன நாள் இன்று கொண்டாடப்பட்டது.

ஹைதராபாத்தில் நடைபெற்ற விழாவில் பேசிய இந்த அமைப்பின் தென் மண்டல தலைவரும் கூடுதல் தலைமை இயக்குனருமான திரு விஜய் முகல், கனிமவள

கண்டுபிடிப்பிலும் புவி அறிவியல் ஆராய்ச்சியிலும் இந்த மையம் சாதனைகளை படைத்துள்ளதாக தெரிவித்தார்.

நாட்டின் நவீன தேவைகளை பூர்த்தி செய்வதற்கான முக்கிய கனிம வளங்களை வெளிக்கொண்டு வருவதற்காகன முக்கிய பணியை இந்த மையம் செய்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்திய புவி ஆய்வு மையத்தின் முன்னாள் தலைமை இயக்குனர், 19ஆம் நூற்றாண்டில் நிலக்கரி கண்டுபிடிப்பு முதல் இந்த நிறுவனம் தொழில் நுட்ப ரீதியாக விரிவடைந்து இருப்பதாக தெரிவித்தார்.

கடல் சார் புவியியல் மற்றும் மக்கள் நலனுக்கான புவி அறிவியல் திட்டங்களிலும் இந்திய புவி ஆய்வு மையம் கவனம் செலுத்தி வருவதாக தெரிவித்தார்.

உலகின் இரண்டாவது பெரிய புவி ஆய்வு மையமாக இது திகழ்கிறது என்றும் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பெரிதும் உதவி இருப்பதாக அவர் கூறியுள்ளார்.

<<<<<<>>>>

இலங்கையின் காலே நகரில் இருந்து நாற்பது நாட்டிகல் மைல் தொலைவில் சிக்கியுள்ள ஈரான் நாட்டின் போர்க்கப்பலை மீட்டுக் கொண்டுவர இலங்கை கடற்படையின் கப்பல்கள் அனுப்பப்பட்டுள்ளன.

இந்த தகவலை அந்நாட்டின் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ஈரான் போர்க்கப்பலான Dena கடலில் தத்தளித்துக் கொண்டிருப்பதாக விடுத்த கோரிக்கையை ஏற்று இலங்கை இந்த நடவடிக்கையை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை கடல் எல்லைக்கு அப்பால் இந்த கப்பல் சிக்கியுள்ள போதிலும் மனிதாபிமான அடிப்படையில் அதனை மீட்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

இது குறித்து செய்தியாளர்களிடம் பேசிய இலங்ைக வெளியுறவு அமைச்சர், அந்த கப்பலில் 180 பேர்

உள்ளதாகவும் அவர்களில் 30 கப்பல் பணியாளர்கள் இதுவரை மீட்கப்பட்டு உள்ளதாகவும் தெரிவித்தார்.

கப்பல் சிக்கியுள்ளதற்கான காரணம் குறித்து இதுவரை எந்த தகவலும்தெரிவிக்கப்படவில்லை.

< < < < < < < > > > >

***விளையாட்டுச் செய்திகள்***

***உலகக்கோப்பை டுவென்டி – டுவென்டி கிரிக்கெட் போட்டியின் முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் நியூசிலாந்துக்கு எதிராக தென்னாப்பிரிக்கா முதலில் பேட் செய்து வருகிறது.***

***கொல்கத்தாவில் சற்றுமுன்னர் தொடங்கிய இப்போட்டியில், தென்னாப்பிரிக்கா 4 ஓவரில் 2 விக்கெட் இழப்பிற்கு 28 ரன் எடுத்துள்ளது.***

***இந்த ஆட்டத்தில் டாஸ் வென்ற நியூசிலாந்து முதலில் பந்துவீச தீர்மானித்தது.***

***----------------------***

***டுவென்டி – டுவென்டி கிரிக்கெட் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசை பட்டியலின் பேட்டிங் பிரிவில் இந்தியாவின் அபிஷேக் சர்மா தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறார்.***

***பந்துவீச்சு பிரிவில் பும்ராவும் முதலிடத்தில் உள்ளார்.***

***----------------***

***Prague சர்வதேச செஸ் போட்டியின் ஆறாவது சுற்றில் இந்தியாவின் அரவிந்த் சிதம்பரம் –குகேஷை வென்றார்.***

***----------------***

***சிங்கப்பூர் சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Hemanth Gowda இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.***

***இன்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 21-13, 21-15 என்ற செட் கணக்கில், இந்தோனேஷியாவின் Bima Al Ayman -ஐ வென்றார்.***

***---------------***

***ஆசிய கோப்பை மகளிர் கால்பந்து போட்டியில் வியட்நாம் 2-1 என்ற கோல் கணக்கில் இந்தியாவை வென்றது***

< < < < <END> > > >